DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் செவ்வாய்கிழமை 10ம் நாள் சாட்சியாகிய பாலாஜி என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலாஜி | வயது | 63 |
| த/பெ. | வெங்கடசாமி | இனம் | ஆண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | முகவர் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.60/2020**

(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**<u>மனுவின் பேரில் அழைத்து குறுக்கு விசாரணை 10.06.2025 அ.சா.1</u>**

1. நான் சம்பவத்தின் போது எங்கு வசித்து வந்தேன் என்றால் அரக்கோணத்தில் வசித்து வந்தேன். எனது வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 2 கிலோமீட்டர் தூரம் இருக்கும். எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் புகாரை தட்டச்சு செய்து கொடுத்தேனா அல்லது கையால் எழுதி கொடுத்தேனா என்றால் எழுதி கொடுத்தேன். புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் எழுதினேன்.

2. புகாரில் தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புகாரை எந்த காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் 19.03.2018ம் தேதி நகர காவல் நிலையத்தில் மாலை 5.30 மணிக்கு கொடுத்தேன். இந்த விஷயத்தை போலீஸ் விசாரணை மற்றும் புகாரில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன்.

3. புகாரில் 19.03.2018ம் தேதி புகார் கொடுத்ததாக தெரிவித்திருந்தால் தவறா என்றால் அது சரி. புகாரை கொடுக்கும் போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் நான் மட்டும் தான் சென்றேன். சம்பவம் எப்போது நடந்தது என்றால் 19.03.2018ம் தேதி. புகார் கொடுத்த போது போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் அன்றைய தினமே விசாரித்தார்கள். அதன்பிறகு விசாரித்தார்களா என்றால் இல்லை.

4. சம்பவ இடத்தை சுற்றி கடைகள், பொதுமக்கள் நடமாட்டம் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடம் அரக்கோணத்தில் இருந்து திருத்தணி செல்லும் வழியில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால்

சரிதான். சம்பவம் பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் ஒரு வாரம் கழித்து தெரியும். சம்பவ இடத்தை சுற்றி CCTV கேமிரா உள்ளது என்றால் எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் போலீஸ் CCTV கேமிரா உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் புகார் கொடுத்த பிறகு எதிரிகளிடம் பணம் கேட்டு பேசினேன் என்றால் இல்லை. எதிரிகள் பணம் உடன்படவில்லை என்பதால் பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. எதிரிகளுக்கும், எனக்கும் இருந்த கொடுக்கல் வாங்கல் பிரச்சனை காரணமாக பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.